**கவனிக்க.-** 2020.03.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி I, பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** Covid - 19 தொற்றுநோய் காரணமாக 2020.04.03 ஆந் திகதிய 2170 ஆம் இலக்க, 2020.04.09 ஆந் திகதிய 2171 ஆம் இலக்க, 2020.04.17 ஆந் திகதிய 2172 ஆம் இலக்க, 2020.04.24 ஆந் திகதிய 2173 ஆம் இலக்க, 2020.04.30 ஆந் திகதிய 2174 ஆம் இலக்க, 2020.05.06 ஆந் திகதிய 2175 ஆம் இலக்க, 2020.05.15 ஆந் திகதிய 2176 ஆம் இலக்க மற்றும் 2020.05.22 ஆந் திகதிய 2177 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2178 - 2020 මැයි මස 29 වැනි සිකුරාදා - 2020.05.29

2178 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 473 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 472 | ஏல விற்பனைகள் | 474 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.''.

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

541-B82025-405(2020/05)

**விசேட அறிவித்தல்**

**கவனிக்க.-** Covid - 19 தொற்றுநோய் காரணமாக நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்திக் கண்காணித்தல் நடவடிக்கைகளினால் அரசாங்க மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமையினால் 16.03.2020 முதல் 11.05.2020 ஆந் திகதி வரை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அறிவித்தல்கள் எதுவும் அரசாங்க அச்சகத்தால் பொறுப்பேற்கப்படவில்லை.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு கோட்டைமுனை TT-2 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை

### 2020 யூலை - 2021 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஆம் ஆண்டின் ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1982 ஆம் வருட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை வடக்குப் பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைமுனை கள்ளுத்தவறணைக்கான 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஐந்நூறு ரூபா (ரூபா 500.00) பணத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளரின் பெயரில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டின் பிரதியையும், பெறுமதிச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2020.06.01 ஆந் திகதி முதல் 2020.06.15 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழின் மூலப்பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இப்பெறுமதிச் சான்றிதழுடன் காணிப் பதிவாளரினால் வழங்கப்படும் காணி வரலாற்றுச் சுருக்கப் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இது கேள்விப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்குப் பிந்திய தினத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

3. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையினுள் தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் பிரதிகளை இன்னுமொரு கடித உறையினுள் இட்டு அதனை மூடி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தாலும் மேற்படி இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாமலிருந்தாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பிப்பின் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

7. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத்தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

8. ஏனைய விபரங்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | TT No. - 2 | 2020.06.15 | பி.ப. 3.00 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2020.06.15 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்குக் கூடும்.
2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2020.06.22 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நடைபெறும்.

05-02

---

## திருகோணமலை மாவட்ட கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை - 2020/2021

(2020, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2021, யூன் 30 ஆந் திகதி வரை)

2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு சில்லறையாக விற்பதற்கான, 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகையினை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளுக்கேற்ப, கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைக்கான விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து விலைகோரல் படிவங்களும், திருகோணமலை பிரதேச செயலாளர் பணிமனையிலிருந்து பெற்று அவற்றைப் பூர்த்தி செய்வதுடன், கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி கோரல் வைப்புப் பணத்தினை வைப்புச் செய்தமையை உறுதிப்படுத்தும் முகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும், குறிப்பிட்ட விலை கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை நிர்ணயத்திற்கு ஆகக் குறைந்தளவான 15% ஆன பெறுமதிச் சான்றிதழையும் அதனோடு இணைத்தல் வேண்டும்.

3. உரியவாறு தயாரிக்கப்பட்ட அனைத்து விலைகோரல் பத்திரங்களும் அரசுக்கு முத்திரையிடப்பட்ட கடிதவுறையில் இடப்படல் வேண்டும். அக் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "............................... இலக்கமுடைய ........................... கள்ளுத்தவறணைக்கான விலைக்கோரல்" எனக் குறிப்பிடப்படுவதுடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தவறணையின் பெயர், இலக்கம் ஆகியவற்றையும் குறிப்பிட்டு 2020.06.22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அந் நேரத்திற்கு முன் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளரின் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தரது அலுவலக அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைகோரல் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. விலை கோரலானது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை குத்தகைக்கான விற்பனை நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

5. 2020.06.22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைகோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடனேயே விலை கோரல் பத்திரங்கள் திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் அனைத்து கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தரகர்கள் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனைக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. முன் வைக்கப்பட்ட விலை கோரல் படிவங்களுள் தெரிவு செய்யப்பட்ட திருப்திகரமான ஒப்பந்தக்காரரால் 02 மாதங்களுக்கு மேற்பட்ட வைப்புப் பணமும் ஒரு மாதத்திற்கான அனுமதிப்பத்திர கட்டணமும் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த தினத்திலேயே செலுத்தப்படல் வேண்டும்.

7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளுள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ 2020.06.22 ஆந் திகதி விற்பனை செய்ய முடியாதிருப்பின் மீண்டும் விற்பனை செய்வதற்காக 2020.06.26 ஆந் திகதி மு.ப.10.00 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பாரமேற்று முடிந்தவுடனேயே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். இதற்கான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் உரித்தாகும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

8. இது தொடர்பாக மேலதிக விபரங்களை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜே. எஸ். அருள்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

பிரதேச செயலகம்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | வலயப் பிரிவு | கள்ளுத் தவறணை திறக்கும் நேரம் | கள்ளுத் தவறணை மூடும் நேரம் | மீளளிக்கப்படும் விலைகோரல் வைப்புப் பணம் | மீளளிப்புச் செய்யப்படாத விலை கோரல் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வட்டார இல. - 01 | வில்லூன்றி இல.-01 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 3,000.00 | ரூபா 1,000.00 |
| 2. | தெக்கலூத்து | தெக்கலூத்து இல.-03 | மு.ப.11.00<br>பி.ப. 5.00 | பி.ப.2.00<br>பி.ப.8.00 | ரூபா 1,500.00 | ரூபா 1,000.00 |

5- 42

---

## மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவு

2020 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை – 2020/2021

2020 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு வரியை விற்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலையில் 15% இற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "............. இல. ............கள்ளுத்தவறணைக்கான கேள்வி " என்று குறிப்பிட்டு 2020.06.29 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு மஹவெவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் தாக்கல் செய்வது 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2020.06.29 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்வது இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எச். எம். நதீஜா ஹேரத்,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2020, மே 22.

**அட்டவணை**

| தவறணையின் இல. | கிராமம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|
| 18 | தொடுவாவ - (தெற்கு) | 1,000.00 |
| 17 | மட்டகொட்டுவ | 500.00 |
| 16 | அடப்பரகம | 500.00 |

5-48

---

**கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2020/2021**

வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு

2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப் படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு, "........................... ஆம் இலக்க ....................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2020.06.11 ஆந் திகதி தொடக்கம் 2020.06.25 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பு வென்னப்புவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2020.06.25 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததும் எல்லா கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (031- 5679170).

யூ.எஸ்.என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

பிரதேச செயலகம்,
வென்னப்புவ.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தம்பராவில | 2020.06.25 மு.ப. 10.30 மணிக்கு | 500.00 |
| 2. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2020.06.26 மு.ப.10.30 மணிக்கு | 250.00 |
| 3. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வைக்கால் | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |
| 4. | வென்னப்புவ பி.செ. பிரிவு | பொரலஸ்ஸ | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 5. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தும்மலதெனிய | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |
| 6. | வென்னப்புவ பி.செ.பிரிவு | உள்ஹிட்டியாவ | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 7. | வென்னப்புவ பி.செ. பிரிவு | லுணுவில | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 8. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வென்னப்புவ | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 2,000.00 |
| 9. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நயினமடம | 2020.06.25 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு.ப.11.00 | பி.ப. 2.00 |
| பி.ப. 5.00 | பி.ப. 8.00 |

5-50

## முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2020/2021*

*2020, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளாவாறான கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மற்றும் சகல கலால் அனுமதிப்பத்திரங்களுக்கமைவான நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான குத்தகை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் கேள்விகளை சமர்ப்பிக்கப் படுவதுடன், கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை முந்தல் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான ஆதன பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................. இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2020.06.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2020.06.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032- 2052271.*

ஜே. ஏ. விஜானி வசன்திகா,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

*பிரதேச செயலகம்,
முந்தல்,
2020, மே 22.*

**அட்டவணை**

| *தொ. இல.* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *கிராமம்* | *தவறணை திறக்கும் நேரம்* | *தவறணை மூடும் நேரம்* | *தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும்* | *கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச.* |
|---|---|---|---|---|---|---|
| *1.* | *முந்தல்* | *முந்தல்* | *மு.ப. 11.00 மணி<br>பி.ப.5.00 மணி* | *பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி* | *மு.ப.10.30 மணி 2020.06.30* | *1,000.00* |

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத் திரம் ஏற் கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 2. | முந்தல் | மதுரங்குளி | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2020.06.30 | 1,000.00 |
| 3. | முந்தல் | முக்கு தொடுவாவ | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2020.06.30 | 1,000.00 |
| 4. | முந்தல் | உடப்பு | மு.ப. 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2020.06.30 | 1,000.00 |

5-53

---

## நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவு

## கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

*2020 யூலை மாதம் முதல் 2021 யூன் மாதம் வரை*

*2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாகக் கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனையாகும். 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் கள்ளுத்தவறணைகள் குத்தகை இடும் நிபந்தனைகளுக்குமமைவானதாகும்.*

*3. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணமாக நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் முறையாக பொதியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்கத்தில் மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு " 01 முதுகடுவ கள்ளுத்தவறணை " அல்லது " 02 கடுனேரிய கள்ளுத்தவறணை" எனக் குறிப்பிடப்பட்டு 2020.06.24 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், நாத்தாண்டிய" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*5. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*6. 2020, யூன் 24 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

7. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின், அவற்றுக்கான மீள் விற்பனை ---------- ஆந் திகதி காலை ------ மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

டீ. எம். ஆர். பீ. தசநாயக்க,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய,
2020, மே 22.

**அட்டவணை**

| இல. | வலயம் | கிராமம் | வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | நாத்தாண்டிய | மூதுகடுவ | ரூ.1,000.00 |
| 2. | நாத்தாண்டிய | கட்டுனேரிய | ரூ.1,000.00 |

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

கண்டி, பேராதெனிய வீதி, இல. 396/12C எனும் முகவரியில் வசிக்கும் திருமதி அன்ரனீற்றா மெடோனா ஜோசப் (தே. அ. அ. இல. 576911890V) ஆகிய நான், மட்டக்களப்பு எல்லை வீதி, 1 ஆம் குறுக்கு, திசவீரசிங்கம் சதுக்கம், இல. 37/17 எனும் முகவரியில் வசிக்கும் புகழேந்திரன் மயூரன் (தே. அ. அ. இல. 873550260V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று, கறுவாக்கேணி என்னுமிடத்தில் அமைந்துள்ள "கறுவாக்கேணி எஸ்ரேட்" என அழைக்கப்படும் காணிக்கான மட்டக்களப்பு உதவிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் Serial No. E104, Folio No. 13, Volume No. 27 இல் 2019.07.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள பிரசித்த நொத்தாரிசு பிரியாந்தி வேல்முருகு அவர்களால் 01 ஆம் இலக்கத்தில் 2019.06.17 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இன்று முதல் சட்டரீதியாக இரத்துச் செய்கிறேன் என்பதனை இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.இதன் பின்னர் மேற்குறித்த நபரால் மேற்கொள்ளப்படும் எந்தச் செயலுக்கும் நான் பொறுப்பல்ல.

திருமதி அன்ரனீற்றா மெடோனா ஜோசப்.

05-40

## கடன் கொடுத்தவர்களுக்கான கூட்டம்

ISM eCompany APAC (Private) Limited

(கம்பனி பதிவு இலக்கம் PV 00211249)

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334 ஆம் பிரிவிற்கு இணங்க, முன்மொழியப்பட்ட தன்னியக்கமான கம்பனிக் கலைப்பு தொடர்பான ISM eCompany APAC (Private) Limited (கம்பனி) இன் கடன் கொடுத்தவர்களுக்கான கூட்டமானது 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 9 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள விருப்பமுடைய எந்தவொரு கடன் கொடுத்தவரும் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 7 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அவர்கள் கோரி பெற்றுக்கொள்ள விரும்பும் சரியான பணத்தொகையையும் கோரிக்கைக்கான காரணத்தையும் adminlegal@ism.nl (மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடவும்) என்ற மின்னஞ்சலுக்கு தெரிவிக்க வேண்டும் மற்றும் அவருக்கான கூட்டத்திற்கான அழைப்பு எளிதாக்கப்படும்.

சபையின் கட்டளைப்படி,

ISM eCompany APAC (Private) Limited.

05-22